## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள்–2019

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| விபரங்கள் | தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை |
|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/21/05/Diet/Tp | NP/21/05/Diet/Kc | NP/21/05/Diet/Vv | NP/21/05/Diet/Mn |
| பெறுகை ஆவணங்களை பெறும், கையளிக்கும் முகவரி | பி.சு.சே.ப, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 0212222278 | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி. 0212285329 | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, வவுனியா. 02422222262 | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, மன்னார். 0232222261 |
| பெறுகைப்பிணைத்தொகை | ரூபா.200,000 | ரூபா.200,000 | ரூபா.300,000 | ரூபா.200,000. |
| மீளளிக்கப்படாத வைப்பு | ரூபா.2,500 | ரூபா.2,500 | ரூபா.3,500 | ரூபா.2,500 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை பரிசீலிக்க முடியும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலை நாட்களில் 30 ஏப்ரல் 2019 ஆம் திகதி தொடக்கம் 20 மே 2019 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6. பெறுகை ஆவணங்கள் 22 மே 2019 ஆம் திகதி 1000 மணிக்கு முன்பதாக மேலே காட்டப்பட்ட முகவரிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ்குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 13 மே 2019 ஆம் திகதி 1000 மணிக்கு நடைபெறும்.

8. மேற்குறிப்பிட்ட பெறுகைப்பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி .ஆ.கேதீஸ்வரன்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பெரிது),**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**சுகாதாரக்கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், 40000.**

021-222-0811, 021-222-0809 www.np.gov.lk தொலைநகல்: 021-222-0808 மின்னஞ்சல்:capdhsnp@gmail.com